IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# இராஜேந்திரன் சோழன் இலக்கிய பயணங்கள்

நெறியாளர்
முனைவர்.பா.சுப்புலெட்சுமி,
இணைப்பேராசிரியர் & தமிழ்த்துறைத் தலைவர்,(ப.நி)
கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
திருவண்ணாமலை - 606601

சே.சுமதி,
முனைவர் பட்டஆய்வாளர் (பகுதி நேரம்),
கலைஞர் கருணாநிதி அரசு கலைக் கல்லூரி,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
திருவண்ணாமலை - 606601
கைபேசி – 9345273790
மின்னஞ்சல் - tamil260622013@gmail.com

எழுத்தாளர் இராசேந்திரசோழன் (அஸ்வகோஸ்) (டிசம்பர் 17, 1945 -மார்ச் 1, 2024) மார்க்ஸிய மீது ஆர்வம் கொண்டவர். பின்னர் தமிழ்த்தேசியப் பொதுவுடைமைப் பார்வை என மாற்றிக்கொண்டார். வட தமிழகத்து அடித்தள மக்களின் வாழ்க்கையை எழுதிய படைப்பாளிகளில் ஒருவர். அடித்தள மனிதர்களின் வாழ்க்கையை அவர்களின் பாலுணர்ச்சிகளின் அடிப்படையில் எழுதியமையால் விவாதங்களுக்கு உள்ளானவர். சிறுகதைகள், நாவலகள், கட்டுரைகள் எனக் கலை இலக்கியத்திலும், அரசியல், அறிவியல், தத்துவம், போராட்டம் எனப் பொது வாழ்விலுமாக, வாழ்க்கையின் பெரும்பகுதியை சமூகச் செயல்பாடுகளால் நிறைத்தவர். இராசேந்திரசோழன் தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். மார்க்சிய மற்றும் தமிழ்த் தேசியப் பார்வைகளுடன் வட தமிழக அடித்தளமக்களின் வாழ்க்கையையும், பாலுணர்வுகளையும், மனித உணர்வுகளையும் மையமாகக் கொண்டுசிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள் எழுதினார். **“அஸ்வகோஸ்”** என்ற புனைப்பெயரிலும் எழுதிய இவர், **’தனபாக்கியத்தோட ரவ நேரம்’** போன்ற சிறுகதைகள் மூலம் இலக்கிய உலகில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர், இவரது படைப்புகள் சமூக யதார்த்தத்தையும், மனித உளவியலையும் ஆழமாகப் பேசுகின்றன. கதைகள் மட்டுமின்றி செம்மலர், தீக்கதிர், கண்ணோட்டம் ஆகிய இதழ்களில் கலை இலக்கியம், அரசியல், அறிவியல், தத்துவம் என ஏராளமான கட்டுரைகள் எழுதியவர்.

ஆசிரியராகப் பணியாற்றுகையில் டால்ஸ்டாய், கார்க்கி இருவரின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டார். ஜார்ஜ் பொலிட்சர் எழுதிய **“மார்க்ஸிய மெய்ஞானம் ஓர் அரிச்சுவடி”** எனும் நூல் தமிழகத்தில் பெரிய செல்வாக்கை பெற்றது. தமிழில் புதுமைப்பித்தனும், தி.ஜானகிராமனும் இவரை கவர்ந்த எழுத்தாளர்கள்.

1971-ல் ஆனந்த விகடன் மாவட்ட அளவில் சிறப்பிதழ்கள் வெளியிட்டு, அது சார்ந்த சிறுகதைப் போட்டிகளும் நடத்தி வந்த நேரத்தில், தென்னார்க்காடு மாவட்டத்துக்கான சிறுகதைப் போட்டியில் **“எங்கள் தெருவில்”** என்ற கதை மூலம் அறிமுகமானார். ஜெயகாந்தன் தேர்ந்தெடுத்த அந்தக்கதை கோபுர ஓவியத்துடன் வெளியானது. இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்ஸிஸ்ட்)யின் இதழ் செம்மலரில் **“பறிமுதல்“** என்னும் கதை வெளியானது. அரசுப் பணி எழுத்துக்குத் தடையாக இருக்கும் சூழல் என்பதனால்

அஸ்வகோஷ் என்ற பெயரை வைத்துக் கொண்டார். தொடர்ந்து செம்மலர், தீக்கதிர் போன்ற இதழ்களில் அஸ்வகோஷ் என்னும் பெயரில் கதைகள் எழுதத் தொடங்கினார்.

கம்யூனிஸ்டுக் கட்சியில் இருந்து கதைகள் எழுதுவது பற்றி வந்த அறிவுறுத்தல்களால் ஒவ்வாமை கொண்ட ராஜேந்திரசோழன் சென்னையில் இருந்து வெளிவந்த கசடதபற இதழில் கதைகள் எழுதினார். அது மார்க்சியத்துக்கு எதிரான கொள்கை கொண்ட இதழ். அஃ, கணையாழி போன்ற இதழ்களிலும் எழுதினார் **"கோணல் வடிவங்கள்", "புற்றிலுறையும் பாம்புகள்"** போன்ற புகழ் பெற்ற கதைகள் 1970-1974 காலகட்டத்தில் எழுதப்பட்டவை. அப்போது கசடதபற குழுவுக்கு அணுக்கமாக இருந்த க்ரியாராமகிருஷ்ணன் அறிமுகமானார். க்ரியாபதிப்பக வெளியீடாக வந்த **"எட்டுகதைகள்"** என்னும் தொகுதி இவருடைய முதல் நூல். அது தமிழ் நவீன இலக்கிய வட்டாரத்தில் பெரிதும் கவனிக்கப்பட்டது. தொடர்ந்து **"பறிமுதல்"** என்னும் தொகுப்பு வெளி வந்தது. **"சிறகுகள் முளைத்து"** என்னும் குறுநாவல் விவாதங்களை உருவாக்கியது. தமிழினி பதிப்பகம் இவருடைய சிறுகதைகளை தொகுத்து வெளியிட்ட பின் இலக்கியச் சூழலில் பெரிதும் பேசப்படுபவராக ஆனார். ராஜேந்திரசோழன் இரண்டாண்டு காலம் சென்னைத் தோழர்களுடன் இணைந்து **"பிரச்சனை", "உதயம்"** இதழ்களை நடத்தி அவற்றில் நிறைய எழுதினார். **"மண்மொழி"** என்ற சமூக மேம்பாட்டு இதழை நடத்தியுள்ளார்.

**நாடகத் துறையில் ஈடுபாடு :**

ராஜேந்திரசோழன் நாடகத் துறையில் ஈடுபாடு ஏற்பட்டு, தில்லி தேசிய நாடகப் பள்ளி தமிழகத்தில் திண்டுக்கல்லை அடுத்த காந்தி கிராமத்தில் பாதல் சர்க்கார் தலைமையில் பத்து வாரகாலம் நடத்திய தீவிரநாடகப் பயிற்சிப் பட்டறையில் ஊதியமில்லா விடுப்பு போட்டு கலந்து கொண்டார். பயிற்சி முடிந்து நெய்வேலியில் அனல் மின் நிலையத் தோழர்களைக் கொண்ட ஒரு நாடகக் குழுவை உருவாக்கினார். புதிய கல்விக் கொள்கையை எதிர்த்து அவர் எழுதிய நாளை வரும் வெள்ளம், நெருக்கடிநிலை அடக்குமுறைகளைப் பற்றிய விசாரணை ஆகியவை குறிப்பிடத்தக்க நாடகங்கள் ஆகும்.

**எதிர்ப்பு :**

1985-ல் அஸ்வகோஷ் என்ற பெயரில் ராஜேந்திரசோழன் எழுதி வெளியிட்ட **"சிறகுகள் முளைத்து"** என்னும் குறுநாவலும் அந்நாவலுக்கு ராஜேந்திரசோழன் எழுதிய மிக நீண்ட முன்னுரையும் இடதுசாரி வட்டாரத்தில் கடுமையான எதிர்ப்புகளை உருவாக்கின. அதில் குடிசைப்பகுதி இளைஞன் ஒருவனின் வயதடைதலும் அரசியலுணர்வு பெறுதலும் பேசப்பட்டிருந்தன. தொழிலாளர்ப் பெண்களை ஒழுக்கமற்றவர்களாகச் சித்தரிக்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டார். நெடுங்காலம் கைப்பிரதியாக இருந்து வெளியான நாவல் என அந்த முன்னுரையில் குறிப்பிடுகிறார். அந்த விவாதமே மார்க்ஸிய கம்யூனிஸ்டுக் கட்சியின் கலையிலக்கிய அமைப்புகளுடன் அவர் பிரிந்து கொள்ள வழிவகுத்தது.

2008-ல் பாட்டாளிமக்கள் கட்சி, வன்னியர் சங்கம் ஆகியவற்றின் பின்புலத்துடன் தமிழ்ப் படைப்பாளிகள் பேரியக்கம் 14 ஜூன் 2008-ல் சென்னையில் தொடங்கப்பட்டபோது பிரம்மராஜன் போன்ற நவீனக் கவிஞர்களுடன் ராஜேந்திரசோழனும் கலந்து கொண்டார். இடதுசாரியான அவர் சாதிச்சங்கத்தின் இலக்கிய அமைப்பின் தொடக்க விழாவில் கலந்து கொண்டது விமர்சிக்கப்பட்டது.

2010-ல் இடதுசாரிகள் இஸ்லாமிய, கிறிஸ்தவ அடிப்படை வாதத்தைப் பற்றி மௌனம் சாதிப்பது அல்லது சாதக நிலைபாடு எடுப்பது என்னும் அரசியல் சூழ்ச்சிமுறை எப்படி அவர்களின் நம்பகத்தன்மையை அழிக்கிறது என தமிழினி மாத இதழில் எழுதிய கட்டுரை ராஜேந்திரசோழனின் நண்பர்கள் நடுவிலும் எதிர்ப்பை ஈட்டியளித்தது. **"இறை நம்பிக்கையும் மதவெறியும் ஒன்று அல்ல"** என்னும் அவருடைய கருத்து கடுமையாக மறுக்கப்பட்டது.

**ஆவணப்படம் :**

2019-ல் எழுத்தாளர் பவா செல்லதுரையின் மகன் வம்சி மற்றும் உமாகதிர் இருவரும் இராசேந்திரசோழன் பற்றிய ஆவணப்படத்தை தயாரித்து இயக்கினர். (இராசேந்திரசோழன் ஆவணப்படம்)

2019-ல் புதுவை சீனு. தமிழ்மணி, முனைவர்.பா.இரவிக்குமார், முனைவர்.இரா. செங்கொடி, முனைவர் வி.செல்வப்பெருமாள் ஆகிய நால்வர் குழு, நட்புக் குயில்கள் என்ற அமைப்பின் பெயரில் **"பன்முகப் படைப்பாளி இராசேந்திரசோழன் (அஸ்வகோஷ்) - வாழ்வு - படைப்பு - செயல்பாடு"** என்ற தலைப்பில் இரண்டு தொகுப்பு நூல்களை வெளியிட்டனர்.

**இராசேந்திரசோழனின் கதைகளின் பாடுபொருள் :**

இராசேந்திரசோழனின் படைப்புக்கள் மனிதனின் பண்புகளையும், இயங்குநிலையையும் பேசுகின்றன. **"ஏழைகள் இல்லாமை காரணமாக அவர்கள் அடையும் அவமானங்கள், சிதையும் மனிதமாண்புகள், அனைத்தையும் மீறி வெளிப்படும் அன்பும் நேசமும் இவைதான் பெரும்பாலான அவர் கதைகளின் பாடுபொருளாக அமைந்தவை"** என்று ச.தமிழ்ச்செல்வன் குறிப்பிடுகிறார்.

ஜெயமோகன் **"தமிழில் பாலியல் சித்தரிப்பு"** எழுத்தில் முக்கியமான திருப்புமுனை என்றால் ராஜேந்திரசோழன் எழுதிய **"புற்றில் உறையும் பாம்புகள்"** போன்ற சிறுகதைகளையும், **"சிறகுகள் முளைத்து".** என்னும் சிறிய நாவலையும் சுட்டிக்காட்டலாம். ஆவை அக்காலகட்டத்தில் ஆழமான விவாதங்களை உருவாக்கியவை. ஒழுக்க நெறிகளுக்கு அப்பால் பாலுறவுத்தளத்தில் நிகழும் நுட்பமான சுரண்டலை ஆழமாகச் சித்தரித்தவை அவரது ஆக்கங்கள். ஆனால் அவருடைய பாலியல் புரிதல் அகம் சார்ந்தது அல்ல. சமூகச் சித்திரத்தின் ஒரு பகுதி அது. அச்சமூகச்சித்திரம் ஏற்கனவே அவர் புரிந்து வைத்திருக்கும் மார்க்ஸிய கொள்கைகளால் ஆனது. ஆகவே நுண்மைகள் அற்ற, சற்று துணிவான பாலியலெழுத்தாகவே அவருடைய கதைகள் நிலை கொள்கின்றன" என்கிறார். எஸ்.ராமகிருஷ்ணனும் **"புற்றில் உறையும் பாம்புகள்"** சிறுகதையை தமிழின் சிறந்த நூறு சிறுகதைகளில் ஒன்றாகக் கருதுகிறார்.

**பெண்கள் நிலை :**

கணவன் மனைவி உறவில் தோன்றும் பிணக்கையும் இணக்கத்தையும் **'தனபாக்கியத்தோட ரவ நேரம்'** என்னும் கதைவாயிலாக காணமுடிகிறது. பெண் என்று சொல்லிடிலோ என்னும் சிறுகதையில் மங்காத்தாகணவன் குடித்துவிட்டு வந்தாலும் அவனுடன் வாழ்கிறாள் இவ்விரு கதைகளிலும் தனபாக்கியத்தை அடிக்கும் கணவராக இருந்தாலும் சரிமங்காத்தாவின் கணவன் குடிகாரனாக இருந்தாலும் சரி இல்லறமே நல்லறம் என வாழும் பெண்களின் நிலையை பார்க்க முடிகிறது. நாய்வேசம் என்னும் சிறுகதையில் கள்ள உறவில் உள்ள தன் மனைவியை காணும் இருசப்பன் மனைவியின் மடிபுதைத்து அழும் நொய்மையான ஆண் ஒருவனை காண முடிகிறது. காணிக்கை என்னும் சிறுகதையில் தன் மகளுக்காக சொக்கலிங்கத்தின் இச்சைக்கு இணக்கும் ராசத்தியை காண முடிகிறது. காதலுறவில் கர்ப்பிணியாகி கருவழித்து வீட்டுக்குள்

முடங்கி விட்ட மகளை திருமண செய்து வைக்கும் முயற்சியில் நிராகரிப்பை எதிர் கொள்ள நேர்கின்ற தாயின் மனப்பதட்டங்களை "தோது" என்னும் கதையில் காண முடிகிறது.

வாழ்க்கை துணையாக வரும் மனைவி திருமணமான நாள் முதல் வாழ்வின் இறுதிவரை தன் துணையாக இருக்கிறாள். அவ்வகையில் பறிமுதல் என்னும் சிறுகதையில் தன் கணவருக்கு உடல்நிலை சரியில்லாமல் படுத்தபடுக்கையாக இருக்கிறார். அவர் வேலை செய்து குடும்பத்தை பார்த்துக் கொள்ளும் நிலைமாறி மனைவி களைவெட்டி, நடவு நட்டு, கூலிவேலை செய்து தன் குடும்பத்தை தூக்கிக் கொள்கிறாள். அதேபோல் பவுனம்மாள் வீட்டு வேலைகளையும் முடித்துவிட்டு தன் பிள்ளைகளையும் பள்ளிக்கு அனுப்பிவிட்டு மாமியாருக்கு வேண்டியதை செய்து விட்டு, உழவுத்தொழில் செய்யும் தன் கணவருக்கு கூழ் எடுத்துச் செல்கிறாள். எங்கள் தெரு, பறிமுதல் ஆகிய இவ்விரு சிறுகதைகளிலும் கணவன் மனைவி உறவு வாழ்வின் இறுதிவரை மனைவி கணவனுக்கு துணையாக நிற்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை :**

இன்றைய சமூகத்தில் நடைபெறும் மனிதர்களின் வாழ்கையை பிரதிபலிப்பனவாக இவரின் சிறுகதைகளைப் படைத்துள்ளார். ஆண்கள் பெண்களை எவ்வாறு பார்க்கின்றனர் என்பதையும் பெண்கள் தங்கள் குடும்பத்திற்காக எவ்வாறு செயல்படுகின்றனர். அன்பும் நேசமும் இவைதான் பெரும்பாலான அவர் சிறுகதையில் இடம் பெறுவதை தெரிந்து கொள்ளலாம்.

**பார்வை நூல்கள் :**


1. அஸ்வகோஷ் ஆவணப்படம் வெளியீடு.
2. இச்சையின் சிற்றோடைகள் எழுத்தாளர் ஜெயமோகன்
3. இராசேந்திரசோழன் கதைகளில் ஆண் - பெண் உறவு, மானசீகன், தமிழினி பிப்ரவரி 2022
4. இராசேந்திரசோழன் பாண்டியராஜன் கட்டுரை
5. இராசேந்திரசோழன் ஆவணப்படம்.